**செய்தி வெளியீடு எண்: 231** **நாள்: 06.04.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5.4.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 25 உதவி பொறியாளர், 19 நில அளவையர், 19 இளநிலை வரைவு அலுவலர், 12 தட்டச்சர், 125 இளநிலை உதவியாளர், 75 தொழில்நுட்ப உதவியாளர், என மொத்தம் 275 பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 பேர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் வாரியப் பணியாளர்கள் அதிக அளவில் ஓய்வு பெற்றதால், வாரியத் திட்டங்கள் மற்றும் அன்றாடப் பணிகளைத் தடையின்றி செயல்படுத்தும் நோக்கில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால், நேரடி நியமனமுறை மூலம் காலிப் பணியிடங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்று 2016–2017ஆம் ஆண்டிற்கான வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, அண்ணா பல்கலைக்கழகம் மூலம் எழுத்து தேர்வு நடத்தப்பட்டு, 1:2 என்ற விகிதாச்சார அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அதிகாரிகள் குழு மூலம் நேர்முக தேர்வு நடத்தப்பட்டு, 25 உதவி பொறியாளர், 19 நில அளவையர், 19 இளநிலை வரைவு அலுவலர், 12 தட்டச்சர், 125 இளநிலை உதவியாளர், 75 தொழில்நுட்ப உதவியாளர், என மொத்தம் 275 பணியிடங்களுக்கு பணியாளர்கள் நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 275 பேர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 பேர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் செயலாளர் திரு.பி.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**